[2024 பிப்ரவரி 14

**15—**

## கால்நடை மருத்துவமனை

***66505—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், புலிப்பாக்கம் மற்றும் திம்மாவரம் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், புலிப்பாக்கம் மற்றும் திம்மாவரம் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள புலிப்பாக்கம், திம்மாவரம் ஆகிய பகுதிகள் ஏற்கெனவே கால்நடை மருத்துவமனை அமைந்துள்ள ஆத்தூர் பகுதியிலிருந்து 5 கிலோ மீட்டருக்கு அதிகமான தூரத்தில் இருக்கின்றன. எனவே, அங்கு கால்நடைகளை அழைத்துச் சென்று சிகிச்சை அளிப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், இப்போது இந்த இரண்டு கிராமங்களைச் சேர்த்தாலே மூன்றாயிரத்திற்கும் அதிகமான கால்நடைகள் வருகின்றன. அதுமட்டுமல்லாமல், இந்தக் கிராமங்களைச் சுற்றியுள்ள ஊர்களான ராஜகுளிப்பேட்டை, காந்தலூர், இளையான்குடி, வடகால், செட்டிபுண்ணியம் ஆகிய அனைத்து கிராமங்களிலுள்ள கால்நடைகளையும் கணக்கிட்டால் ஆறாயிரத்திற்கும் அதிகமான கால்நடைகள்

*2024 பிப்ரவரி 14]*

*மற்றும் செல்லப் பிராணிகள் இருப்பதால், கால்நடை கிளை நிலையத்திற்கு பதிலாக ஒரு நவீன கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் கால்நடை அலகுகளுடைய எண்ணிக்கை மூன்றாயிரத்திற்குமேல் இருக்குமானால் அங்கு கால்நடை கிளை நிலையம், அதுபோல ஐந்தாயிரத்திற்குமேல் இருக்குமானால் அங்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தரப்படுகின்றது. அரசினுடைய வரையறை அப்படி அமைக்கப்பட்டிருக்கின்றது. முதலில் கால்நடை கிளை நிலையம்தான் தொடங்கப்படுகிறது. பின்னர் அந்தக் கிளை நிலையத்தில் தினசரி 30 கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் இதர சேவைகள் வழங்கும்பட்சத்தில் கால்நடை மருந்தகமாக தரமுயர்த்தப்படுகிறது. அந்த மருந்தகத்திற்கு தினசரி சிகிச்சைக்குவரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் கூடுதலாக இருக்கும்பட்சத்தில் அது கால்நடை மருத்துவமனையாக தரமுயர்த்தப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள, புலிப்பாக்கம் பகுதியில் 2,863 மாட்டின அலகுகளும், 310 ஆட்டின அலகுகளும், 127 கோழியின அலகுகளும் என மொத்தம் 3,300 கால்நடை அலகுகள் உள்ளன. மூன்றாயிரம் கால்நடை அலகிற்கு ஒரு கால்நடை கிளை நிலையம் என்பது அரசினுடைய வரையறைக்குட்பட்டதாலும், ஆத்தூர் கால்நடை மருந்தகம் 8 கிலோ மீட்டர் தொலைவிலும், அஞ்சூர் கால்நடை மருந்தகம் 7 கிலோ மீட்டர் தொலைவிலும் செயல்பட்டு வருவதால், மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள புலிப்பாக்கம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனினும், மாண்புமிகு உறுப்பினர் கால்நடை மருத்துவமனை கோரியுள்ளார். திம்மாவரம் கிராமத்திற்கு அருகில் 1.5 கிலோ மீட்டர் தொலைவில் ஆத்தூர் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால், திம்மாவரம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. கால்நடை விவசாயிகள்*

*அந்த மருத்துவ சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

**திருமதி ம. வரலட்சுமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு தொகுதியில், கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் உள்ள கோட்ட உதவி இயக்குநர் அலுவலகம் 50 வருடங்கள் பழமையானதாக இருக்கின்றது. அது மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் புதிதாக உதவி இயக்குநர் அலுவலகம் ஒன்று கட்டித் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. மேலும், செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், வண்டலூர் வட்டத்திற்குட்பட்ட, நந்திவரம் கால்நடை மருந்தகத்தில் தற்போது நாளொன்றிற்கு 75 முதல் 100 எண்ணிக்கையிலான செல்லப் பிராணிகள் மற்றும் கால்நடைகள் சிகிச்சைக்கு வருகின்றன. நந்திவரம் கால்நடை மருந்தகக் கட்டுப்பாட்டில் தற்போதைய நிலவரப்படி பதினெட்டாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. இந்த மருந்தகத்தினை கால்நடை பராமரிப்பு இயக்குநர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் ஆய்வு செய்து, பன்முக மருத்துவமனையாக தரமுயர்த்திட* proposal *அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இந்த கால்நடை மருந்தகத்தினை பன்முக மருத்துவமனையாக தரமுயர்த்தித் தர ஆவன செய்யும்படி தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பழுதடைந்த கட்டடத்தை புதிதாக கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், எங்கெங்கெல்லாம் கட்டடங்கள் பழுதடைந்திருக்கின்றனவோ அந்தக் கட்டடங்களைச் சரிசெய்வதற்காக நிதியை*

*2024 பிப்ரவரி 14]*

*வழங்குகின்றபோது, முதலில் நீங்கள் குறிப்பிட்ட அந்தக் கட்டடத்திற்கான நிதியை வழங்கி, கட்டித் தருவோமென்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதிலும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளிலே கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள் அமைக்க கோரிக்கை விடுத்தவண்ணமாக உள்ளனர்.*

*முற்பகல் 10–20*

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற கடந்த மே 2021 முதல் நாளது வரை, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் பகுதிநேர கிளை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று சுமார் 250 கோரிக்கைகள் விடுத்துள்ளார்கள். இவர்கள் தவிர, மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் முதலானோரும் சுமார் 700 கோரிக்கைகளை அளித்துள்ளனர். அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் துறை அலுவலர்கள் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. கடந்த 2021–2022 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும்விதமாக, விவசாயிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்கும்விதமாக, 50 புதிய கால்நடை பார்வை கிளை நிலையங்களை அமைக்கவும், 25 கால்நடை கிளை நிலையங்களை பார்வை மருந்தகமாக தரமுயர்த்தியும் ஆணையிட்டார்கள். அவை அனைத்தும் கால்நடை வளர்ப்போர் பயன்பெறும்வண்ணம் செயல்பட்டு வருகின்றன.*

*மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதிகளில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு வகுத்துள்ள வரையறைகளுக்குட்பட்டிருப்பின், அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, வருங்காலங்களில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*